OS No.449/2017

DW–1 –பாரதி

த/பெ.

நாள். 28.01.2026

<u>பிரதிவாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

1.வாதி திருமாலை நான் காதல் திருமணம் புரிந்தேன். வாதியை நான் திருமணம் செய்த போது எனக்கு ஏற்கனவே திருமணம் ஆகி இருந்தது வாதியை நான் இரண்டாவதாக தான் திருமணம் செய்தேன் என்றால் சரிதான். எங்கள் திருமணத்திற்கு பின்பு இரண்டு வீட்டாருக்கு இடையேவும் எந்த போக்குவரத்து இல்லை என்றும் அதனால் தான் திருப்பூருக்கு வந்தோம் என்று சொன்னால் சிறிது காலம் எந்த போக்குவரத்தும் இருக்கவில்லை.

2. நானும் என் கணவரும் ஆன வாதியும் திருமணத்தை ரத்து செய்ய மனு தாக்கல் செய்து திருமண ரத்து செய்யப்பட்டது என்றும் சொன்னால் ஆமாம். திருமணம் ஆன காலகட்டத்தில் வாதி சிங்கர் டெய்லராக கம்பெனிக்கு வேலைக்கு சென்று கொண்டு இருந்தார் என்று சொன்னால் அவ்வப்போது செல்வார் என் தகப்பனார் போலீஸ் வேலையில் இருந்தார். என் தகப்பனார் 2004 ஆம் ஆண்டில் பணி ஓய்வு பெற்று விட்டார். அந்த ஆவணங்கள் எதுவும் நான் நீதிமன்றத்தில் ஆவண படுத்தவில்லை என்றால் ஆமாம்.

3. தாவா சொத்து யாரிடம் இருந்து வாங்கப்பட்டது என்று கேட்டால் அது இந்துராணியிடமிருந்து வாங்கப்பட்டது. தாவா சொத்தை வாங்குவதற்கு ரவிச்சந்திரன் என்ற நபர் இடைத்தரகர் போல் செயல்பட்டார் என்றும் சொன்னால் ஆமாம். கிரைய ஆவணத்தில் யார் யார் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்று கேட்டால் கண்ணன் என்ற நபர் சாட்சி கையொப்பம் செய்தார். வாதி தான் என் மீது கொண்ட அன்பின் காரணமாக முழு கிரைய தொகையை கொடுத்து என்னுடைய பெயரில் கிரைய ஆவணத்தை பதிவு

செய்தார் என்று சொன்னால் சரியல்ல, என்னுடைய அப்பாவும் கிரைய ஆவணத்தை பதிவு செய்வதற்கு தொகை கொடுத்திருக்கிறார்.

4.என் தகப்பனார் தாவா சொத்தை வாங்குவதற்கு எந்த பண உதவியும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கு குழந்தை பேறு வருவதற்காக வாதி தான் முழு மருத்துவ செலவுகளும் செய்தார் என்று சொன்னால் சரியல்ல அவர் எந்த செலவும் செய்யவில்லை. என் பெற்றோர் திருமணத்திற்கு பின்பு 2015 ஆம் ஆண்டு வரையில் எங்களை வந்து பார்க்கவுமில்லை, எந்த பண உதவியும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, மூன்றாம் மாதத்திலேயே வந்துவிட்டார்கள்.

5.என்னுடைய பிரமாணவாக்கு மூலத்தின் பாரா எண்.3 சொல்லியுள்ள விவரங்கள் வழக்குக்காக நான் பொய்யாக சொல்லி இருப்பவை என்று சொன்னால் சரியல்ல. வாதி எனக்கு நாலு லட்சம் ரூபாய் கொடுத்து மருத்துவம் பார்ப்பதற்காக என் தாய் வீட்டில் கொண்டு சென்று விட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை வாங்குவதற்கு என் தகப்பனார் உதவி செய்தார் என்பதை நிரூபிக்க நான் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேலும் கட்டிடம் கட்டுவதற்கும் என் தகப்பனார் தான் உதவி செய்தார் என்பதை நிருபிக்க எந்த ஆவணமும் ஆஜர் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

6. சொத்தின் அசல் ஆவணமும் நீதிமன்றத்தில் நான் ஆஜர் செய்யவில்லை அதற்கான குறிப்பிட்ட காரணம் ஏதும் இருக்கிறதா என்று கேட்டால் அதை அடமானம் வைத்திருக்கிறேன் அதனால் அவற்றை ஆஜர் செய்ய முடியவில்லை. அசோக் என்ற தனி நபரிடம் அடமானம் வைத்திருக்கிறேன். அப்படித்தான் என்னுடைய பிரமாணவாக்கு மூலத்தின் பாரா எண். 14-ம் சொல்லி இருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். 20.06.2021 என்று பிரமாணவாக்கு மூலத்தில் சொல்லி இருக்கிறேன் என்று சொன்னால் உண்மையான தேதி 2017 ஆம் ஆண்டு ஆகும்.

7. 2017 ஆம் ஆண்டு முதல் இன்று வரை மேற்படி ஆவணம் அடமானத்தில் இருந்த போதிலும் அதற்கான அடமான தொகை அசலோ வட்டியோ செலுத்துவதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை என்று சொன்னால் அந்த நபர் தெரிந்த நபர் என்பதால் அவர் கைமாற்றாக கொடுத்து வாங்கி இருக்கிறேன். அசல் ஆவணங்களை கைவசம் வைத்துக் கொண்டுதான் இருக்கிறேன் என்றும் வழக்குக்காக பொய்யாக அடமானத்தில் இருக்கிறது என்றும் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

8.வாதிக்கும் எனக்கும் எந்த தகராருமே இல்லாமல் நானாக என்னுடைய விருப்பத்தில் தான் வீட்டில் இருந்த பொருட்களை எடுத்துக்கொண்டு சென்று விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. இது சம்பந்தப்பட்ட வீரபாண்டி காவல் நிலையத்தில் என் மீது வாதி புகார் கொடுத்து இருந்தார் என்று சொன்னால் சரிதான். அவருக்கு தேவையான பொருட்களை நான் கொடுத்துவிட்டு என்னுடைய பொருட்களை மட்டும் தான் எடுத்துச் சென்றேன். நான் 2015 ஆம் ஆண்டு முதல் சென்னை திருத்தணியில் என் பெற்றோருடன் வசித்து வருகிறேன் என்றும் சொன்னால் சரிதான். தாவா சொத்தில் தான் குடியிருக்கிறேன் என்பதை நிரூபிக்க எந்த ஆவணமும் நான் ஆஜர் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் கட்டிடம் கட்டுவதற்கு வரைபடம் அனுமதி ஏதாவது என் பெயரில் வாங்கி இருக்கிறேனா என்றால் இல்லை.

9.தாவா சொத்தில் நான்கு ரூம்கள் இருக்கிறது வாதி தான் சிறுக, சிறுக பனியன் தொழிலாளியாக இருந்து அனைத்தையும் சேர்த்து கட்டி இருக்கிறார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை ரவிச்சந்திரன் என்ற முத்திரைத்தாள் விற்பனையாளரிடம் இருந்து முத்திரைத்தாள் வாங்கி பதிவு செய்தோம். கிரையம் செய்வதற்கு முத்திரைத்தாள்கள் மற்றும் அனைத்து விவரங்களையும் அவர் தான் எழுதினார் பேசி பார்த்து, படித்து காட்டி கையெழுத்து என்னிடம் வாங்கினார்.

10.முழுக்க முழுக்க வாதியின் உழைப்பால் வாங்கிய சொத்து இது என்றும் நான் பெயரளவில் மட்டுமே தாவா சொத்துக்கு உரிமையாளராக நியமிக்கப்பட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. வாதி தாவா சொத்தில் ஒரு பகுதி பங்கு தான் கூறுகிறார் என்றும் வழக்குப்படி தீர்ப்பாக வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya.

Digitally signed by Dr.V.Sree Vidya.
DN: cn=Dr.V.Sree Vidya., ou=Judicial Department, o=Judicial Officer, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.